அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :161/2016

தேதி. : 21/10/2016

### சிப்பெட் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை டெல்லிக்கு மாற்றுவதற்கான அவசியம் என்ன? ச.ம.க. நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் கேள்வி.

1968-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட சிப்பெட் **(CIPET – Central Institute of Plastic Engineering and Technology)** என்ற தன்னாட்சி நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள கிண்டி தொழிற்பேட்டையில் இன்று வரை மிகச் சிறப்பாக இயங்கிவருகிறது. இந்த தலைமை அலுவலகத்தை மத்திய ரசாயனம் மற்றும் உரத்தொழில் துறை டெல்லிக்கு மாற்ற முயற்சி மேற்கொண்டிருப்பது கண்டனத்துக்குரியது.

சிப்பெட் நிறுவனத்தின் மையங்கள் இந்தியாவின் பல்வேறு இடங்களில் செயல்பட்டுவருகின்றன. அனைத்து மையங்களிலும் உயர்த்தர பரிசோதனை கூடங்கள், பிளாஸ்டிக் மற்றும் பாலிமர் தொழில் சார்ந்த தொழில் நுட்ப கல்வியும் ஆராய்ச்சி படிப்புகளும் உள்ளன. உற்பத்தி துறையிலும் ஒரு முக்கிய இடத்தை பெற்றிருக்கிறது.

பிளாஸ்டிக் கல்வியில் பட்டய படிப்பு,முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்பு உள்பட பல பயிற்சி திட்டங்களை இந்த நிறுவனம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் இந்த நிறுவனம் லாபகரத்துடனும் இயங்கிக்கொண்டிருக்கிறது. சிப்பெட் நிறுவனம் அதன் சேவை தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாகவும் உள்ளது.

சிப்பெட் நிறுவனத்தை கடந்த மத்திய அரசும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு கைவிட்டது. நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை மாற்றுவதால் பணிப்புரியும் பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவார்கள். இந்த நிறுவனம் தமிழக இளைஞர்களின் திறனை வளர்ப்பதற்கு மிகுந்த உதவியாக இருந்திருக்கிறது.

இயந்திரங்களோடு பணிபுரியும் ஆபரேட்டர் தொழிலாளிகள் முதல் சிறு குறு மத்திய மற்றும் பெரும் பிரிவு நிறுவனங்கள் வரை தமிழகம், ஆந்திரா என அனைத்து தென்னிந்திய மாநிலங்களுக்கும் பிளாஸ்டிக் பாலிமர் தொழில்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருந்துவந்திருக்கிறது. இந்த நிறுவனம் டெல்லிக்கு மாற்றப்பட்டால் இந்த நிறுவனத்தையும் இதன் ஆராய்ச்சிகளையும் செயல்பாட்டையும் நம்பி இருக்கும் தமிழகத்தில் உள்ள தொழில்கள் பாதிப்புக்குள்ளாகும் என்பதை அனைவரும் அறிவோம்.

பெருந்தலைவர் மற்றும் வெங்கட்ராமன் அவர்களும் எடுத்த சீரிய முயற்சியால் இத்தனை காலம் வெற்றிகரமாக நடந்துவந்த நிறுவனம் எந்த ஒரு உரிய காரணம் இல்லாமல் மாற்றுவதை உடனடியாக நிறுத்தவேண்டும்.

கடந்த சில மாதங்களில் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு தமிழகத்தின் முன்னேற்றத்தின் மீதும், தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும் பாரபட்சமான முறையில் செயல்பட்டு கொண்டிருக்கிறார்களோ என்ற ஐயம் எழுகிறது

எனவே, சிப்பெட் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தை டெல்லிக்கு மாற்றவிருக்கும் முயற்சியை கைவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்